இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 06 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 30 – சனிக்கிழமை 15 ஆகஸ்ட் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 06 : Thiruvalluvar Year - 2057 - Aadi 30 - Saturday 15 August 2026 - Dak 8 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (14,8,2026), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் "ஈவிஎம்-ஐ ஒழிப்போம் – வாக்குச் சீட்டு முறையை மீண்டும் கொண்டு வருவோம் – ஜனநாயக உரிமையை காப்போம்" எனும் கோட்பாடுகளுடன் துவங்கப்பட்டுள்ள இந்திய மக்கள் வாக்குரிமை மீட்பு இயக்கத்தினர் (Movement for Retrieving Voter Rights – MRVR) நேரில் சந்தித்தனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், துணைப் பொதுச்செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எஸ்.முத்துசாமி, டி.ஆர்.பி.ராஜா, சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

## தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 22.8.2026 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் தி.மு.க. தலைமைச் செயற்குழு கூட்டம் சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: கழக ஆக்கப் பணிகள்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :14.08.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### கோவை மாணவர் அமுதன் படுகொலைக்கு நீதி கேட்கும் தி.மு.க.!

# த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மாணவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மாணவர் அமுதன் படுகொலையைக் கண்டித்து – பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று முழக்கம்!




கோவை கல்லூரி மாணவர் படுகொலையைக் கண்டித்து கழக மாணவர் அணி சார்பில் ஒத்தக்கால் மண்டபம் பகுதியில் அமைந்துள்ள இந்துஸ்தான் கல்லூரி வாயில் முன்பு கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி தலைமையில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன், கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) அ.சுதாகர், கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, கழக மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர், பொறுப்பாளர், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**கோவை, ஆக. 15-**

**கோவை கல்லூரியில் மாணவர் அமுதனை போதை கும்பல் படுகொலை செய்ததை மூடி மறைக்க முயற்சிக்கும் த.வெ.க. அரசை கண்டித்து தி.மு.க. மாணவரணி சார்பில் கோவையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

கோவை தனியார் கல்லூரியில் போதை பொருள் புழக்கத்தை பற்றி கல்லூரி நிர்வாகத்திடம் புகார் அளித்த மாணவர் அமுதன் போதை பொருள் கும்பல் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக புகார் கூறப்பட்டுள்ளது. கல்லூரிக்குள் கோஷ்டி மோதலால் நிகழ்ந்த கொலை என சட்டப்பேரவையில் பொய் கூறிய அமைச்சர் ராஜ்மோகனுக்கு மாணவர் அமுதனின் பெற்றோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். மாணவனின் கொலையை கல்லூரி நிர்வாகமும், ஆளும் த.வெ.க. அரசின் காவல் துறையும் மூடி மறைக்க முயற்சித்து வருகின்றனர் என தி.மு.க. மாணவரணி குற்றம் சாட்டியுள்ளது.

இந்நிலையில், த.வெ.க. அரசின் கைப் பாவையான காவல் துறையையும், கல்லூரி நிர்வாகத்தையும் கண்டித்து கோவையில் தி.மு.க. மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்ட இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாணவர் கொலையை மூடி மறைக்க முயற்சிக்கும் த.வெ.க அரசுக்கு எதிராகவும், மாணவர் கொலைக்கு நீதி கேட்டும் விண்ணதிர முழக்கமிட்டனர்.

தொழில் நகரமாக திகழும் கோவை மாநகரை, த.வெ.க. ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களில் கொலை நகரமாக மாற்றிவிட்டதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முழக்கமிட்டனர். இதற்கெல்லாம் மக்கள் நீதி மன்றத்தில் பதில் சொல்லாமல், முதலமைச்சர் விஜய் தொடர்ந்து மௌனத்தையே மக்களுக்கு பதிலாக அளிப்பதாகவும் சாடினர்.

கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. மாநில மாணவரணி செயலாளர் வீரமணி, கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை செந்தமிழ்ச்செல்வன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, மேயர் ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் சுதாகர், மாநில மாணவரணி துணைச் செயலாளர்கள் கோகுல், பிரபு, அந்தோணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைவு- மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது!

மேட்டூர், ஆக.15-

கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த வாரம் கனமழை கொட்டித் தீர்த்தது. இதன்காரணமாக, கபினி, கே.ஆர். எஸ். உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்தது. இதையடுத்து, வேறுவழியின்றி உபரி நீரை கர்நாடகா அரசு திறந்து விட்டது.

கர்நாடகா அணைகளில் திறந்து விட்ட உபரி நீர் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. கடந்த சில நாட்களாக வினாடிக்கு 8 ஆயிரத்து 600 கன அடி வரை வந்து கொண்டிருந்த நிலையில் தற்போது அணைக்கான நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரத்து 247 கன அடியாக குறைந்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80 புள்ளி 7 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு ஆயிரத்து 500 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

### பட்டியல் இன மக்களின் ரூ. 25 ஆயிரம் கோடியை

## 'வெற்றி' திட்டங்களுக்கு த.வெ.க. அரசு மடைமாற்றம்!

சென்னை, ஆக.15-

சென்னை பல்கலைக்கழகப் பேராசிரியர் கதிரவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், த.வெ.க. அரசின் வெற்றி வீடு திட்டத்திற்கு 330 கோடியை பட்டியலின மக்களின் நிதியிலிருந்து மாற்றம் செய்துள்ளது என்றும், தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்திற்கு 112 கோடியும் மற்றும் அண்ணனின் சீர்வரிசை என தங்கம் வழங்கும் திட்டத்திற்கான நிதி 812 கோடி ரூபாயும் பட்டியலின மக்களுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசு பெரும்பாலான நிதியினை பொது திட்டங்களுக்கு ஆதிதிராவிட நிதியிலிருந்து செயல்படுத்தி வருகின்றது என்றும், புலிகள் பாதுகாப்பு திட்டத்திற்கு ஆதிதிராவிடர் நலத்திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படுகின்றது, இது எவ்விதத்தில் ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் என்று தெரியவில்லை என்றும், அதுபோல் ஆதிதிராவிட நிதியிலிருந்து மாநிலத் தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு பட்டியலின மக்களின் வளர்ச்சிக்கு என சிறப்பு திட்டங்களை உருவாக்காமல் பொது பிரிவினருக்கு வழங்குகின்ற திட்டங்களை ஆதிதிராவிடர்களுக்கும் வழங்குகின்றோம் என்று கூறி அந்தத் திட்டத்திற்கான முழு நிதியினை ஆதிதிராவிட நிதியிலிருந்து எடுத்து செலவழித்து வருகின்றது என்பது வேதனைக்கு உரியதாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.